உ

கடவுள் துணை.

சிந்தாதரிப்பேட்டை

குட்டிநாய்க்கன் தெருவிலெழுந்தருளிய

# வேம்புலியம்மன் பதிகம்.




சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

கடவுள் துணை.

# வேம்புலியம்மன்பதிகம்.

## ஆசிரியவிருத்தம்.

சுந்தரிநிரந்தரி திகம்பரிபரம்பரி
சுமங்கலிக் கன்னிகௌரி
சுத்தபரிபூரணி அத்துவிதகாரணி
ஸ்தூலசூட் சுமிநாரணி
அந்தரிநிரந்தரி புரந்தரிபுராந்தகி
ஆலமற்கடவுள் கௌரி
அகிலபுவனேஸ்வரி சுகஜகுணகாத்திரி
அடியவரைக் கார்க்குமாரி
இந்திரன்முதன்முனிவ ரெந்தநாளுந்துதித்
தேத்தித்தொழுந்தெய்வமே.
எத்தேசகாலமுன் வித்தாரமேசொலும்
யெளியேனைக்கார்ப்பதரிதோ
கந்தமலிசிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கன்னிடங்கொண்டவமையே
காம்பரிசாம்பவி யாம்புலியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே. க

அருணனைப்போலொளிர்ச் செந்தாமைமந்தாரை
அரியமல்லிகை முல்லையும்

அருகொடுக்குருகவன மன்மதபாணமும்
அலரிவாடாமல்லியும்
சிறுசெண்பகம்பச்சை செண்டுமல்லிகைகோங்கு
செண்பகங்கொன்றைமுதலாய்
ஜெகமீதிலுற்பவித்தோங்குமலர்யாவுமுன்
செங்கமல மலர்மீதிலே
இருநேரமர்ச்சித்து பூசித்துநேசித்து
வென்னுடனுனக்கடிமையாய்
எண்ணமிட்டுன்மகிமை வண்ணமிட்டுரவாடும்
யெளியனேக் காருமம்மா
கருணைவளர்சிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங்கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே. 2

துதிமேவுமென்னடித் துதிசெய்வதல்லாது
தொல்லுலகிரண்டேழுவாய்
தூதுயுரியண்ணமார் பாதகமலங்களும்
தொண்டதுபுரிந்தநாளும்
பதிமேவுநின்னினைவு கிஞ்சித்துமறவாது
பழகிவருமேழையிங்கு
படுந்துயரெனுங்கஷ்ட நிஷ்டூரமியாவையும்
பார்வதி யரியாததோ
நிதிமேவுசெல்வர்பாற் சென்றுகெஞ்சாமலும்
நின்றநிலைபிரியாமலும்

நேரிட்டஅகத்திக்கு சோரிட்டுஉண்ணுமார்
நீயிட்டு காற்பையம்மே
கதிமேவுங்சிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங்கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலிமகம்மாரியே. 3
மதிரவியினன்னைநீ மறையவன்தாயுநீ
மலையரையன் மகளானநீ
மண்ணேடுவிண்ணுகில் அண்டம்புரந்தநீ
மாசற்றமலர்மேனிநீ
துதிபெற்றகஜமுகன் கந்தனதுதாயிநீ
துய்யமறையடிமுடியுநீ
தொல்லுலகிலெண்பத்து நான்குலட்சஞ்சீவ
தோற்றமு மளித்தவளுநீ
சதியாயிரஞ்செய்த கொடியனுனுமுனை
சரணென் றடைந்தபின்னர்
சகியாததாய்மார்கள் நிலமிசையுள்ளரோ
தற்கார்த்து அருள்வையம்மே
கதிபெற்றசிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங்கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
மேம்புலி மகம்மாரியே. 4
புத்தியுங்கொண்டகித புவனமீரேழையும்
புன்னகையுடன் கடைக்கண்

பூட்டியேயாட்டிவைப்பா யுனக்கொருகாலில்
பொய்சொலும் மடையர்தம்மை
வெத்திசேர்வேப்பிலை யெனுங்கத்திவீசியே
வேகவைப்பா யுடலெலாம்
விண்டலமுமண்டலமும்உன்போலுமொருதெய்வம்
வேறில்லை யுலகிலம்மா
பத்திநெறியில்லார்க்கு யெத்தாகவினைகாட்டி
பார்க்காமல் விலகிநின்றே
பால்பூசைபொங்கலொடு ஆடுகோழிகள்பலி
பரும்பூசை வாங்குமருள்மா
ஹத்தியேசிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங்கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே 5
பரமனைவெதிர்த்துநீ கைலாயகிரிமீது
பால்பூசை வாங்கிவிட்டாய
படைகொண்டயேமனது குடைகொண்டுதென்பதி
பருங்கிடாக் காவுகொண்டாய்
திரமுள்ளதேவர்சூழ் யிந்திரன்றன்னையும்
திடீலென வணங்கவைத்தாய்
திரைபோன்றநதிநடுவில் சிறைநின்றுபூசித்து
சிவனிடப் பாகமுற்றாய்
பரசுராமன்றனைப் பெற்றபின்னின்னமும்
பக்குவக்கன்னியானாய்

பாரைச்சுமந்தபணி யணியாயணிந்தபின்
பற்றுது மற்றவரவும்
கரமேவுசிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங்கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே. 6

அன்பாகநின்கோயில் வலமாகவந்துமே
அடிதொழுதிடாதபேர்க்கு
ஆகாதஜன்னிச் சயித்தியஞ்சூலையோ
டட்டகுன்மம் பாண்டுநோய்
பன்னுமோரறுபத்து நான்குசுரதோஷமும்
பலவிஷக் கடிகுட்டமும்
பாதைமிகுநலமூல துன்பஞ்சிலந்தியும்
பார்வைசூனியமேவலும்
இன்பமுளநாலா யிரத்துநான்குநூறு
டீரிரண்டான பிணியை
யேற்றிவைத்தேயுனைப் போற்றவைப்பாய்தொழும்
யேழையெனபோ லடியர்மேல்
கண்ணுரச்சிந்தாத்திரி குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங் கொண்டவுமையே.
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே. 7

சீதமிகுசீதாதிலா பகைவராளுலுமே
சிந்தனைச் செய்துவந்தால்

சற்றேனுமனமிளகி யுற்றதைச்சொல்லுவார்
    செங்கண்மால் தங்கையுமையுன்
பாதகமலங்களை பன்னைமிகவுபால்
    பத்தியொடு சித்திநெரியாய்ப்
பார்மீதுயான்படும் கஷ்டநிஷ்டூரமதை
    பலமுறையுரைத்துநின்றும்
ஓதவரியாப்பிறவி யூமைபோலசேய்மோடி
    உண்மையோ யிதுநன்மையோ
உனையன்றிமற்றெனக் காரிங்குபேருதவி
    யொன்றனு முறைசெய்யம்மே
காதல்மிகுசித்தாத்திரிக் குட்டிநாய்க்கன்தெருக்
    கண்ணிடங் கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
    வேம்புலி மகம்மாரியே. 8
சீர்மேவுமுப்பத் திரெண்டரமதுண்டெனச்
    செப்புவா ருலகமீது
ஜென்மித்தநாள்கொண்டு யிம்மட்டிலோரஞ்
    செய்தரிகிலேன் திறமையாய்
பார்மேவுகல்வியுங் கற்றறிகிறேன்கொடிய
    பாவியோர் விரதமறியேன்
பங்கஜநிசர்த்தவுன் பொற்பாதகமலதுதி
    பண்ணவரியேன் சிரியனேன்
நீர்மேவுசெஞ்சடைக் கடவுளொருபங்கிலும்
    நினைவிலு மமர்ந்ததாயே

நீயன்றியென்பிழை பொருத்தாளபூமிமிசை
நேரானவன்னை யறியேன்
கரமேவுசித்தாத்திரி குட்டிநாய்க்கன்திருக்
கண்ணிடங் கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே. 9

தஞ்சமென்றோர்களைக் கார்க்கின்றதெய்வமே
தங்கவொளி வானவடிவே
தமிழ்மாலைபூண்டருள யிச்சித்துவிங்கெனைத்
தடுத்தாண்டும் கொண்டுமனதில்
கொஞ்சமேனும்புத்தி தந்துபதிகங்களாற்
கொண்டாட தொண்டளித்தாய்
கோமளிமாதங்கி சாமளியம்மொழியின்
குற்றமெல்லாஞ் சகித்தே
வஞ்சிவாக்கத்தில்வளர் மோகனுச்சியின்
வரத்தா லுதித்தசிறியேன்
வரிவினைனுயிலும் சிதம்பராச்சாரியான்
வரைந்தசொல் லோங்கவருள்வாய்
கஞ்சமவர்குடைநீழ குட்டிநாய்க்கன்தெருக்
கண்ணிடங்கொண்டவுமையே
காம்பரிசாம்பவி யாம்புவியெலாம்பரவு
வேம்புலி மகம்மாரியே. 10

வேம்புலியம்மன் பதிகம் முற்றிற்று.

———